BSNL ஊழியர் சங்கம்
தமிழ்நாடு தொலைதொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்
தமிழ் மாநிலம்

தேதி:- 27.09.2017

ஒப்பந்த தொழிலாளர்கள் பணி பாதுகாப்பை உறுதி செய்த ஈரோடு போராட்டம் பிரமாண்டமான வெற்றி

ஈரோடு மாவட்டத்தில் செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் புதிய டெண்டர் அமுலுக்கு வந்தது. புதிய டெண்டரில் ஈரோடு மாவட்ட நிர்வாகம் தானடித்த மூப்பாக 33 இடங்கள் குறைத்தது. இதன் காரணமாக 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வந்த பல ஒப்பந்த ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதனால் பொது மேலாளர் அலுவலகம் மற்றும் தொலைபேசி நிலையத்தில் பணியாற்றி வந்த பெண் ஒப்பந்த ஊழியர்கள் பணி மறுக்கப்பட்டனர்.

நிர்வாகத்தின் எதேச்சதிகார போக்கினை கண்டித்து இரு மாவட்டச் சங்கங்கள் ஒன்றிணைந்து 05.09.2017 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது. 07.09.2017 அன்று உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டார்கள். நிர்வாகம் நமது கோரிக்கைகளை எறக மறுத்தது மட்டுமல்ல தொழிற்சங்கங்களை அழைத்து பேசவும் முன்வரவில்லை..

இந்த நிலையில் ஈரோடு மாவட்டச் சங்கங்கள் 11.09.2017 முதல் 13.09.2017 முதல் தொடர் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டார்கள். ஒப்பந்த ஊழியர் மாநிலச் செயலர் தோழர். C. வினோத்குமார் தொடர் உண்ணாவிரதத்தில் பங்கேற்றார்.

15.09.2017 அன்று BSNLEU மற்றும் TNTCWU இணைந்த மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. BSNLEU மாநிலச் செயலர் தோழர் A. பாபு ராதாகிருஷ்ணன் மற்றும் TNTCWU மாநிலச் செயலர் தோழர் C.வினோத்குமார் அகியோர் கலந்து கொண்டார்கள்.. அதற்கு பிறகு மாநிலச் சங்க நிர்வாகிகளோடு மாவட்டச் சங்க நிர்வாகிகளும் மாவட்ட நிர்வாகத்தோடு மூன்று மணி நேரம் பேச்சு நடைபெற்றது. பேச்சு வார்த்தையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டாலும் சுமூக முடிவு எட்டபடவில்லை. பாதிக்கப்பட்ட அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களையும் திருப்பி பணியில் எடுக்கப்படும் வரை நமது போராட்டம் தொடரும் என தெரிவித்தோம். அதற்கு பின்னரும் மாவட்ட நிர்வாகத்தோடு நடைபெற்ற பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாததால் BSNLEU மற்றும் TNTCWU மாநில செயலாளர்கள் தலைமையில் 26.09.2017 அன்று உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அறைகூவல் விடப்பட்டது.

26.09.2017 அன்று காலை முதலே தமிழகம் முழுவதிலும் இருந்து அலை அலையாய் ஒப்பந்த ஊழியர்களும், நிரந்தர ஊழியர்களும் ஈரோடு முதன்மை பொது மேலாளர் அலுவலகத்தின் முன் அணி திரண்டனர். அன்றைய தினம் முதன்மை பொதுமேலாளர் விடுப்பில் இருக்கும் தகவல் கூட நமது தோழர்களிடம் நிர்வாகம் தெரிவிக்கவில்லை. சுமார் 800க்கும் அதிகமான தோழர்கள் பங்கேற்ற இந்த உண்ணாவிரத போராட்டத்தை ஈரோடு மாவட்ட CITU செயலாளர் தோழர் சுப்ரமணியன் துவக்கி வைத்தார். போராட்டத்தின் கோரிக்கை தொடர்பாக ஈரோடு மாவட்ட செயலாளர்கள் தோழர் L.பரமேஸ்வரன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர் எடுத்துரைத்தனர். நமது கோரிக்கை முழுவதுமாக நிறைவேற்றப் படும் வரை நாம் துவங்கியுள்ள இந்த போராட்டம் முடிவடையாது என்று தலைமையேற்ற மாநில செயலாளர்கள் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் மற்றும் தோழர் C.வினோத்குமார் உறுதி பட தெரிவித்தனர். அன்று மாலை 3 மணி வரை மாவட்ட நிர்வாகம் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தலைவர்களை பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை. BSNLEU உதவி மாநில செயலாளர் தோழர் M.முருகையா மாநில நிர்வாகத்துடன் பேசியதின் அடிப்படையில் மாநில நிர்வாகம் தலையிட்டு அறிவுறுத்திய பின்னரும் மாவட்ட நிர்வாகம் அடாவடித்தனமாக பேச்சு வார்த்தைக்கு அழைக்காமல் இருந்தது. பொறுமைக்கு மதிப்பில்லை என்ற பின் பழிவாங்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுக்கு ஆதரவாக தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் தோழர்கள் மட்டும் அங்கிருந்த துணைப்பொது மேலாளர் அறைக்கு நீதி கேட்டு புறப்பட்டனர். வேறு வழியின்றி நிர்வாகம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது. பேச்சு வார்த்தையில் BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், உதவி மாநில செயலாளர்கள்

தோழர்.S.சுப்ரமணியன், தோழர் R.M.கிறிஸ்டோபர், தோழர் M.பாபு மாநில அமைப்பு செய்லாளர் தோழர் V.மணியன் மற்றும் ஈரோடு மாவட்ட செயலாளர் தோழர் L.பரமேஸ்வரன் ஆகியோரும், நிர்வாகத்தின் சார்பில் DGM(A), DGM(F), AGM(A) மற்றும் AGM(Vig) ஆகியோரும் கலந்துக் கொண்டனர். பேச்சு வார்த்தை நடைபெறும் அறைக்கு முன் நமது மாநில அமைப்பு செயலாளர் தோழர் K.பழனிகுமார் தலைமையில் நமது தோழர்கள் அமர்ந்திருந்தனர். சுமார் 3½ மணி நேர பேச்சு வார்த்தைக்கு பின் அனைத்து பெண் ஊழியர்களையும் INDOOR பணியில் அமர்த்தவும் அதற்கேற்ற போல் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. நமது கோரிக்கை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாலை 6½ மணியான பின்பும் தமிழகம் முழுவதும் இருந்து திரண்டிருந்த ஒப்பந்த ஊழியர்கள் உள்ளக் குமுறலோடு அதே சமயம் கட்டுப்பாடு காத்து நமது பேச்சு வார்த்தை முடிந்து நாம் அறிவிக்கும் வரை குழுமியிருந்தது பாராட்டத்தக்கது. பேச்சு வார்த்தையின் முடிவுகளை மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் விளக்கி பேசிய போது திரண்டிருந்த அனைத்து தோழர்களின் உற்சாகம் கரை புரண்டோடியது என்றால் அது மிகையாகாது.

தமிழகத்தில் ஒப்பந்த தொழிலாளர்களின் பணிப்பாதுகாப்பை மீண்டும் நமது தமிழ் மாநில சங்கங்கள் உறுதி செய்துள்ளது. ஒப்பந்த ஊழியர்களின் பாதுகாவலன் BSNL ஊழியர் சங்கமும், தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கமும் தான் என மீண்டும் நிரூபித்துள்ளோம்.

இந்த போராட்டத்தில் முழு வெற்றி பெற தமிழகம் முழுவதும் இருந்து அலை அலையாய் திரண்டிட்ட அனைத்து தோழர்களுக்கும் தமிழ் மாநில சங்கங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள். நமது கோரிக்கை வெற்றி பெற அமெரிக்காவில் இருந்த போதும் நல்ல பல ஆலோசனைகளை கொடுத்த உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்களுக்கும், பல்வேறு பணிகளுக்கு இடையேயும் டெல்லியில் இருந்து நமக்கு வழிகாட்டிய நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யூ அவர்களுக்கும் நமது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். சென்னையில் மாநில நிர்வாகத்தோடு தலையிட்டு பேசி பிரச்சனைகள் தீர உதவிய TNTCWU மாநில தலைவர் தோழர் M.முருகையா, BSNLEU மாநில துணைத்தலைவர்கள் தோழர் K.V.சிவகுமரன் மற்றும் தோழர் T.பிரேமா அவர்களுக்கும் நமது வாழ்த்துக்கள். தமிழ் மாநில நிர்வாகத்திலிருந்து பிரச்சனைகள் தீர உதவிய CGM, GM(HR) மற்றும் DGM(A) ஆகியோருக்கும் நமது நன்றிகள். கால தாமதமாக இருந்தாலும் இறுதியில் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிட்ட ஈரோடு மாவட்ட நிர்வாகத்திற்கும் நமது நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். அனைத்திற்கும் மேலாக நமது சங்கங்களின் மீது மிகப்பெரிய நம்பிக்கையோடு 25 நாட்களுக்கு மேல் உறுதியோடு நின்று போராடி மீண்டும் பணிக்கு எடுக்கப்பட்டுள்ள ஈரோடு மாவட்ட பெண் தோழர்களுக்கு தமிழ் மாநில சங்கங்களின் மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். ‘உடுக்கை இழந்தவன் கைப்போல் ஆங்கு இடுக்கண் களைவதாம் நட்பு’. அந்த நட்பினும் உயரிய தோழமை உணர்வோடு ஈரோட்டில் பாதிக்கப்பட்ட தோழர்களுக்காக தமிழகம் முழுவதும் இருந்து பெருந்திரளாய் திரண்டு இந்த போராட்டத்தில் பங்கேற்ற நிரந்தர ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் அனைவருக்கும் தமிழ் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

நமது வாழ்க்கை என்பது போராட்டமே. நமது போராட்ட உணர்வை அக்கினி குஞ்சாய் பாதுகாப்போம். தேவை ஏற்படும் பொழுதெல்லாம் அந்த தீப்பந்தத்தை உயர்த்தி பிடிப்போம். நமது வாழ்வை பாதுகாப்போம். கோரிக்கைகளை வென்றடைவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

A.பாபு ராதாகிருஷ்ணன்	**C.வினோத்குமார்**
மாநில செயலாளர்	**மாநில செயலாளர்**
BSNLEU	**TNTCWU**

BSNL ஊழியர் சங்கம்
ஈரோடு மாவட்டம்

BSNL ஊழியர் சங்கம்
ஈரோடு மாவட்டம்